## DEPOSITION OF WITNESSES
## BEFORE THE HON'BLE PRINCIPAL SUB JUDGE
## AT PUDUCHERRY

## MCOP. NO. 159/2023

### DEPOSITION OF PW2

NAME : சதீஷ்

FATHER'S NAME :

VILLAGE :
PROFESSION :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provisions of act X of 1873 on the 03.02.2025

**முதல் விசாரணை**:

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பு 2வது சாட்சி ஆவேன். நான் எனது தரப்பில் மெய்ப்புறுதி பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதனை படித்துப்பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் சரிதான். உண்மையானவைதான்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. யார் சொல்லி நான் நீதிமன்றத்திற்கு வந்தேன் என்றால் முரளி மனைவி இரிசம்மாள் சொல்லி வந்துள்ளேன். முரளி இறந்துவிட்டதாக சொன்னார்கள். காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் அவர் மனைவி புகார் கொடுத்துள்ளார். இரிசம்மாளை எத்தனை வருடமாக தெரியும் என்றால் முன்பு தெரியாது, அடிப்பட்டவுடன்தான் தெரியும். நாங்கள் இருவரும் ஒரே ஊரா என்றால்

நான் கோட்டக்குப்பம் அவர் எந்த ஊர் என்று தெரியாது. முரளி சென்றதாக சொல்லும் இருசக்கர வாகனத்தை ஓட்டியது யார் என்றால் அவர் பெயர் தெரியாது இவர் பின்னால் அமர்ந்து சென்றார். அது என்ன வண்டி என்றால் TVS Sports வாகனம் ஆகும். இடித்த வண்டி எமாகா R15 ஆகும். முரளி அமர்ந்து சென்ற வாகனத்தை ஓட்டுநருக்கு எங்கு அடிப்பட்டது என்றால் கையில் சிறு கிரல் மற்றும் காலில் அடிப்பட்டது, பின்னால் சென்றவருக்குதான் பலத்த அடிப்பட்டது. விபத்து நடந்த இடத்தில் சுமார் ஒருமணி நேரம் இருந்தேன். நான் அங்கு இருக்கும் போது விபத்து பகுதிக்கு போலிசார் வந்தார்களா என்றால் இல்லை. அந்த இடத்தில் இடித்த வாகனம் நிற்கவில்லை சற்று தள்ளி சென்று நிறுத்தி திரும்பி பார்த்துவிட்டு அவர் சென்றுவிட்டார். எமாகா R15 வண்டி கிழே விழுந்ததா என்றால் ஆமாம், கிழே விழுந்து அவர் வண்டியை எடுத்து சென்றுவிட்டார். அந்த வண்டியை யார் ஓட்டினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த வண்டியை நான் அதன் பிறகு பார்க்கவில்லை என்றால் சரிதான். சாலையின் அகலம் எவ்வளவு என்றால் இரண்டு லாரி செல்ல கூடிய அளவு அகலம் இருக்கும். இரண்டு வாகனமும் எதிர் எதிர் திசையில்தான் மோதிக்கொண்டன. அந்த இரண்டு வாகனத்தை தவிற வேறு வாகனம் இந்த விபத்தில் ஈடுபடவில்லை என்றால் சரிதான். TVS வாகன ஓட்டி R15 வாகனம் வருவதை பார்த்தாரா என்றால் பார்த்துதான் ஓரமாக ஒதுங்கினார், ஆனால் அவர்கள் வேகமாக வந்து மோதிவிட்டார்கள். விபத்தை நிறையபேர் பார்த்தார்கள். விபத்து சாலையில்தான் நடந்தது என்றால் சரிதான். TVS வாகனம் மேற்கொண்டு ஒதுங்க எவ்வளவு இடம் இருந்தது என்றால் இடம் கிடையாது அதற்கு அடுத்து வாய்கால்தான் உள்ளது. நான் பார்த்த விபத்தில் சாலைக்கு அடுத்து மண் பாதை இருந்தது எவ்வளவு அடி என்றால் அரைஅடிதான் இருந்தது. நான் பார்த்ததாக விபத்திற்கும் இந்த விபத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்டுக்கொண்டதற்காக நான் விபத்தை நேரில் பார்த்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.